சுற்றறிக்கை இலக்கம் : 13/2003

எனது இலக்கம் : பி.நொ. 01/19
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 280, பிரதான வீதி,
கொழும்பு 11.
2003.10.17

சகல காணி பதிவாளர்களுக்கும்.

**உரித்து வரைவுகளை அழித்தல்**

"ஆவணங்களை அழித்தல்" எனும் தலைப்பில் என்னால் வெளியிடப்பட்ட இலக்கம் 2/87 மற்றும் 87.02.11 ம் திகதிய சுற்றறிக்கையின் மீது தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. நீண்ட காலம் உரித்து வரைவுகள் அழிக்கப்படாது அலுவலகங்களில் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதன் காரணமாக, அவை கரையான்களால் அரிக்கப்பட்டு அழிவடைவதாகவும், அதன் காரணமாக ஏனைய ஆவணங்களையும் பாதுகாப்பது கடினமாக இருப்பதாகவும், அலுவலகங்களில் இடவசதி போதாதிருப்பதாகவும் எனக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

03. இதன் காரணமாக உரித்து வரைவுகளை அழிப்பது தொடர்பாக நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் (107 ம் அதிகாரம்) 42 வது பிரிவின் துணை ஏற்பாட்டின் பிரகாரம் மற்றும் உரித்து பதிவு செய்தல் தொடர்பான திணைக்கள கையேட்டின் 602 தொடக்கம் 607 வரையான பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கையெடுக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

04. தங்களது சௌகரியத்திற்காக நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 42 வது பிரிவின் துணை ஏற்பாட்டினை கீழே குறிப்பிடுகின்றேன்.

"அவ்வாறெனினும் மேலே இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் கீழ் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்ட மரண சாசனப் பத்திரத்தின் அல்லது குறைநிரப்பு படிவத்தின் வரைவொன்று அல்லது பிரதியொன்றல்லாத ஏதும் ஆவணமொன்று, குறித்த ஆவணத்தின் இணைப் பிரதி தமது அலுவலகத்தின் ஆவணக் கட்டுடன் பாதுகாப்பாக உள்ளதென்பதை வழக்கமாக மேற்கொள்ளப்படும் பரிசோதனையின் பின்னர், தான் திருப்தியுறும் பட்சத்தில் தனக்கு குறித்த ஆவணம் ஒப்படைக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வருட காலங்கள் கடந்ததன் பின்னர் எந்நேரத்திலேனும் பதிவாளரினால் அழிக்கப்பட முடியும்"

05. திணைக்கள கையேட்டின் 602 தொடக்கம் 607 வரையான பிரிவுகளின் பிரித்தெடுப்பையும் இத்துடன் தங்களுக்கு அனுப்பி வைக்கின்றேன். இந்த அரிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கையெடுத்து ஒரு மாத காலத்தினுள் எனக்கு அறிக்கையிடுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

06. இது சம்பந்தமாக தங்களுக்கு ஏதும் வசதிகள் தேவைப்படுமாயின் அது தொடர்பாக எனக்கு உடனடியாக அறியத் தரவும்.

ஒப்பம்
பதிவாளர் நாயகம்

பிரதி :

1. பிரதான அலுவலகத்தின் மற்றும் மத்திய பதிவறையின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள் - அறிந்து கொள்வதற்கு
2. சகல வலயங்களினதும் உதவி பதிவாளர் நாயகங்கள் - அறிந்து கொள்வதற்கு மற்றும் உரிய நடவடிக்கையெடுப்பதற்கு
3. உள்ளக கணக்காய்வுப் பிரிவு - கணக்காய்வு பரிசோதனைகளுக்குச் செல்லும்போது இந்த அலுவலகங்கள் சம்பந்தமாக கவனத்திற் கொள்வதற்கு

M. H. Shathulee Sworn Translator
13/01/2023
M. H. MOHAMED SHATHULEE
SWORN TRANSLATOR
(ENGLISH/SINHALA/TAMIL)
No. 517/2, KALUGAMUWA

## 8 வது பகுதி – ஆவணங்களை அழித்தல்

வரைவுகளை அழித்தல்

602. வரைவுகளை அழித்தல் தொடர்பான சிக்கல்கள் ஒவ்வொரு வருடத்தின் பின்னரும் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

அழிக்க முடியாத வரைவுகள்

603. (1) நொத்தாரிசு பதவியின் நடவடிக்கைகளை இடைநிறுத்திய போதிலும், தற்பொழுதும் உயிருடன் இருக்கும் நொத்தாரிசுகளின் வரைவுகள் பதிவாளர் நாயகத்தின் அனுமதியின்றி அழித்தல் கூடாது.

(2) இரண்டாவது பிரதி சிறந்த நிலையிலுள்ள, அதாவது,
(அ) பூரணப்படுத்தப்பட்டும்,
(ஆ) வாசிக்கக் கூடிய வகையிலும் வாசிக்க முடியாத நிலைக்கு தள்ளப்படாத நிலையிலும்,
காணப்பட்டாலேயன்றி, அவ்வாறின்றேல் வரைவுகள் அழிக்கப்படத் தேவையில்லை.

வரைவுகளை அழிப்பதற்கு முன்னர் இரண்டாவது பிரதியை பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.

604. (1) அழிப்பதற்கான அனுமதியை வழங்குவதற்கு முன்னர், சகல இரண்டாவது பிரதிகளையும் நன்றாகப் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். இவ்வாறு பரீட்சித்துப் பார்க்கும் பட்சத்தில் சட்டபூர்வமான ஆவணங்களை முழுமையாக வாசித்துப் பார்ப்பது அத்தியவசியமெனினும், கீழ் குறிப்பிடப்படும் வரையறைகளுக்குட்பட்டு குறித்த பரிசோதனையை கவனமாகவும் சரியாகவும் மேற்கொள்ளல் வேண்டும்.

(2) பரீட்சிக்கும் செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டியது நிரந்தர எழுதுவினைஞர் சேவையிலுள்ள அனுபவமிக்க உத்தியோகத்தர்களினால் ஆகும்.

வரைவுகளை அழித்ததன் பின்னர் எழுதப்படும் சான்றிதழ்.

605. வரைவுகளில் ஏதும் ஒரு தொகுதியை அழித்ததன் பின்னர், அவ்வாறு அழிக்கப்பட்ட வரைவுகளுடன் தொடர்புடைய சகல உரித்துக்களினதும் இரண்டாவது பிரதியைப் பரீட்சித்துப் பார்த்ததாகவும், அவை சிறந்த முறையில் இருப்பதாகவும், காணி பதிவாளரினால் இங்கு கீழ் குறிப்பிடப்படும் படிவத்தின் பிரகாரம் சான்றிதழொன்றை எழுதுதல் வேண்டும். கிடைக்கப்பெற்ற பிரதி தொடர்பான பட்டியலாகும். (563 (1) இ.பி.) உரிய இடத்தில் இந்த சான்றிதழை எழுதி அதன் இரண்டாவது பிரதியை பிரதான அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

### சான்றிதழின் மாதிரி

வரைவுகள் அழிக்கப்பட்டதாகவும் ........................................................................ இல் வசிக்கும் ........................................................................ நொத்தாரிசினால் பரீட்சிக்கப்பட்டதாகவும் இலக்கம் ...................... தொடக்கம் இலக்கம் .............................. வரையான உரித்துக்களின் இரண்டாவது பிரதி பூரணப்படுத்தப்பட்ட நிலையிலுள்ளதாகவும், வாசிக்கக் கூடியதாகவுள்ளதாகவும், வாசிக்க முடியாத நிலைக்கு இலகுவில் தள்ளப்படாது எனவும், சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதாகவும் ........................................................................ காணிப் பதிவாளராகிய ...................................................... ஆகிய நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

காணிப் பதிவு அலுவலகம் காணிப் பதிவாளர்
............................ 19.......

அழிக்கப்பட வேண்டிய வரைவுகளை துண்டுகளாக கிழித்தல்

606 வரைவுகளில் ஏதும் ஒரு பகுதியை அழிப்பதற்கு இறுதியாக அனுமதி வழங்கப்படும் போது, அழிப்பதற்கு முன்னர் குறித்த ஆவணங்களை துண்டுகளாக கிழித்தல் வேண்டும்.

பாதுகாக்கப்பட வேண்டிய வரைவுகள்

607. அழிக்கப்படாத வரைவுகள் தொடர்பாக, 563 திணை.க. மூலம் விதிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுதல் வேண்டும்.

M.H.M. Shathulee Sworn Translator

12/01/202

M. H. MOHAMED SHATHULEE
SWORN TRANSLATOR
(ENGLISH/SINHALA/TAMIL)
No. 517/2, KALUGAMUWA,